**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051819

1. District மாவட்டம் : கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2021 FIR No. மு.த.அ. எண் 03/2021 Date: நாள் 10.03.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் 09.03.2021 12.00 hrs
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.03.2021 Time : நேரம் 1100 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time : நேரம் 1100 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி இணை 2 சார் பதிவாளர் அலுவலகம், கடலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் --
District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.ஞானசேகர்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் L.ஆறுமுகம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 44
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயி
(g) Address : முகவரி எண்.42, கிழக்கு ராமாபுரம் நடுக்குப்பம், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

பூசைதுரை, சார் பதிவாளர், இணை 2 சார் பதிவாளர் அலுவலகம், கடலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

நான் இன்று 10.03.2021 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்தபோது, கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கிழக்கு ராமாபுரம் நடுக்குப்பம், எண்.42 என்ற முகவரியில் வசிக்கும் L.ஆறுமுகம் மகன் A.ஞனசேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவினை நடவடிக்கை எடுக்கவேண்டி என்னிடம் கொடுத்துக்கொண்டார். புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புதல் A.ஞானசேகர், த/பெ, L.ஆறுமுகம், எண்.42, கிழக்கு ராமாபுரம் நடுக்குப்பம், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம். செல் : 97876-11839 பெறுதல் இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கடலூர். அய்யா, நான் கிழக்கு ராமாபுரம் நடுக்குப்பம் கிராமத்தில் வசித்து

(தொடர்ச்சி பக்கம்-3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / ~~பணிக்கப்படுதல்~~ தி. சண்முகம் பதவி ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................—........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A ஞானசேகர் [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10.03.2021 — 12.30 மணி

Name: பெயர் தி. சண்முகம்
Rank: நிலை ..................... No. எண் .........
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு, கடலூர்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

வருகிறேன். எனக்கு சொந்தமாக கடலூர் வட்டம், புருகீஸ்பேட்டையில் மெத்தை வீடு ஒன்று உள்ளது. நான் அதனை அடமானம் வைத்து ஏற்கனவே கண்ணாரப்பேட்டையில் உள்ள கனரா பேங்கில் கடன் உள்ளது. எனவே, நான் மேற்சொன்ன கடனை அடைக்கவேண்டி கிழக்கு ராமாபுரத்தை சேர்ந்த சின்னராசு, த/பெ, அரிநாராயணன் என்பவரிடம் மேற்சொன்ன மெத்தை வீட்டை அடமானம் போட்டு கடன் தொகையாக ரூபாய் 5 லட்சம் பெற்றுக்கொள்ள முடிவு செய்தேன். அதற்கு சின்னராசுவும் ஒப்புக்கொண்டார். இது சம்மந்தமாக நான் ஒரு கிரைய அக்ரிமெண்ட் பத்திரம் தயார் செய்தேன். அப்பத்திரத்தில் உள்ள விபரம் சரியாக உள்ளதா என பார்க்கவேண்டி நேற்று 09.03.2021ந்தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு கடலூரில் உள்ள இணை-2 சார்பதிவாளரிடம் கொடுத்தேன். பத்திரத்தை படித்து பார்த்த சார்பதிவாளர் பூசைதுரை என்பவர் பத்திரத்தில் பிழை உள்ளது என்றும், சார்பதிவு அலுவலக ஆவணங்களில் சொத்தானது மேற்கு வீதி என குறிப்பிடப்பட்டு உள்ளதாகவும், ஆனால் தாய் பத்திரத்தில் மேலவீதி என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆகவே பத்திரத்தை பதிவு செய்வது சிரமம் என்றும் என்னிடம் சொன்னார். அதை நான் ரிஸ்க் எடுத்துதான் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லியும், அவ்வாறு செய்வதற்கு ரூபாய் 10 ஆயிரம் பணம் வேண்டும் என்றும் கேட்டார். நான் அவரிடம் பதிவுக்குண்டான கட்டணத்தை அரசுக்கு டிடியாக கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு சார்பதிவாளர் பூசைதுரை அவர்கள் இந்த பணம் ரூ.10 ஆயிரம் நான் ரிஸ்க் எடுத்து பத்திரத்தை பதிவு செய்வதற்காக எனக்குண்டான பணம் என்றும் சொன்னார். எனவே எனக்கு தனியாக ரூபாய் 10 ஆயிரத்தை எடுத்துக்கொண்டு 10.03.2021ந்தேதி வருமாறும், பதிவுக்கு வரும்போது பதிவுக்குண்டான பத்திரம், பத்திரத்துடன் இணைந்த அரசு கட்டணத்துக்கான டிடியுடன் சேர்த்து என்னிடம் கொடுத்தால் இந்த பத்திரத்தை பதிவு செய்து தருகிறேன் என்று சொன்னார். மேலும் பத்திரத்தில் மேலவீதி என குறிப்பிடாமல் மேலவீதி என்கிற மேற்கு வீதி என குறிப்பிட்டு பத்திரத்தில் திருத்தம் செய்துக்கொண்டுவர சொன்னார். பின்னர் நான் அவரிடம் எனது மனைவியின் வைத்திய செலவுக்காகதான் நான் இந்த சொத்தை அடமானம் போட்டு பணம் வாங்குகிறேன் என்பதையும், எனது குடும்ப கஷ்டத்தையும் எடுத்து

சொன்னேன். அதற்கு சார்பதிவாளர் பூசைதுரை அவர்கள் சரி பரவாயில்லை, ரூபாய் 10 ஆயிரத்துக்கு பதிலாக ரூ.5ஆயிரத்தை எடுத்துக்கொண்டு வந்து கொடுக்க சொன்னார். நான் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான் யோசித்து பார்த்ததில், லஞ்சம் கொடுத்து இந்த கிரைய அக்ரிமென்ட் பத்திரத்தை பதிவு செய்ய எனக்கு விருப்பம் இல்லை. எனவே சார்பதிவாளர் பூசைதுரை அவர்கள் என்னிடம் லஞ்ச பணமாக கேட்ட ரூ.5 ஆயிரத்துடன், பத்திரத்தையும் சரிசெய்து கொண்டு தங்களிடம் நேரில் புகார் மனு கொடுக்கிறேன். இந்த மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) A.ஞானசேகர். வாதி கொடுத்த புகார் மனுவின் உண்மை தன்மை மீது விசாரணை முடித்து, உரிய அனுமதி பெற்று, இன்று 10.03.2021ம் தேதி காலை 11.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 03/2021, U/s 7 Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர், இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

10.3.21

(தி. கண்மணி)

காவல் ஆய்வாளர்,

ஊ.த.க. பிரிவு, கடலூர்.